மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
இராணிப்பேட்டை.
முன்னிலை திருமதி.ச.பூர்ணிமா, எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராணிப்பேட்டை.
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள் திங்கட்கிழமை
சி.எம்.பி மனு எண். 27/2026,
குற்ற எண்.405/2025 ராணிப்பேட்டை காவல் நிலையம்

அம்மன் கார்ஸ் சார்பாக,
ஆனந்த பாபு, வயது 38
த.பெ. சுந்தரராஜன்,
நெ.15, 1 வது அவன்வு,
பசும்பொன் நகர், கள்ளிகுப்பம்,
அம்பத்தூர்,
சென்னை. ... மனுதாரர்

// எதிராக//

காவல் உதவி ஆய்வாளர்,
இராணிப்பேட்டை காவல் நிலையம்,
இராணிப்பேட்டை. ... எதிர்மனுதாரர்

இம்மனு 09.01.2026 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கவியரசு, திரு. அருண், திரு. ராஜேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்ற அரசு வழக்குறைஞர் நிலை 1 அவர்களும் முன்னிலையாகியும் இம்மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தும் இரு தரப்பு வாதங்கள் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனுவானது கடந்த 06.04.2026 தேதியன்று வழக்கு சொத்தை

போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய உத்தரவிட்டும், மனுதாரருக்கு வழக்கு சொத்தை ஒப்படைக்க வேண்டி பா.ந.சு.ச 497, 503 பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுவின் சுருக்கம் </u>** – மனுதாரருக்கு சொந்தமான FIAT PUNTO CAR White colour கார் வாகனம் பதிவு எண் TN 03 F 9455, Chassis Number MCA118A5E0703268 Engine No. 0166063, என்ற வாகனம் ராணிப்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் வழக்கு பதிவுசெய்து வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு குற்ற எண்.405/2025 சட்டபிரிவு 106 BNS Act ன் கீழ் வழக்கு பதிவுசெய்து ராணிப்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் மேற்படி வாகனம் காவல் நிலைய பொறுப்பில் உள்ளது. வழக்கு சொத்தாக சி.பி.எண்.60/2026 என்று குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்றும் வாகனத்தை வழக்கு சொத்தாக்கி இடைக்காலமாக தன்னிடம் ஒப்படைக்கும் படியும் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாகவும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>பதிலுரை </u>** – அரசு தரப்பில் தனது பதிலுரையில் எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கின் சொத்தை உரிமையாளருக்கு கொடுத்தால் தொடர்ந்து அரசுக்கு எதிரான குற்ற செயலில் இவ்வழக்கின் சொத்தை பயன்படுத்த கூடும் என்பதால் எதிரிக்கு வழக்கு சொத்தை திருப்பி அளிக்க கடுமையான ஆட்சேபனை உண்டு என பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>கேள்வி</u>** – இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா என்பதாகும்?

**<u>தீர்வு</u>** – வழக்கு சொத்து மனுதாரருக்கு உரியது என மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை

பரிசீலிக்கையில் வழக்கு சொத்திற்கு மனுதாரர் தான் உரிமையாளர் என தெளிவாக தெரிகிறது. மேலும் வழக்கு சொத்து மனுதாரருக்கு உரிமையானது இல்லை என யாரும் ஆட்சேபனை செய்யவில்லை. எதிர்மனுதாரரும் வழக்கு சொத்தை மனுதாரருக்கு வழங்க ஆட்சேபனை உண்டு என பதில் அளித்திருந்தாலும், வழக்கு சொத்தின் உரிமையை குறித்து எந்த பிரச்சனையும் இல்லை. மனுதாரரிடம் இருந்தால் அது அவருக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதாலும் இந்த வழக்கு சொத்தினை இடைக்காலமாக மனுதாரரிடம் வழங்குவது தான் அனைத்து கோணங்களிலும் சரியானதாகும் நீதிக்கு உகந்ததாகவும் இருக்கும் என முடிவு செய்து மனுதாரரிடம் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் வழக்கு சொத்தை இடைக்காலமாக வழங்க உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. மனுதாரர் வழக்கு சொத்து புகைப்படத்தை நான்கு கோணங்களிலும் தாக்கல் செய்யவேண்டும்.
2. நீதிமன்றம் கோரும்போது காரினை எவ்வித மாற்றமும் செய்யாமல் ஆஜர்படுத்த வேண்டும்.
3. வழக்கு சொத்து குறித்து பஞ்சநாமா எழுதிக்கொடுக்க வேண்டும்.
4. ரூ.4,00,000/- க்கு ஒரு நபர் பிணைப்பத்திரம் அளிக்க வேண்டும்.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 06.04.2026 ம் தேதி அவையறிய திறந்த நீதிமன்றத்தில் என்னால் பகரப்பட்டது.

SADASIVAM POORNIMA

Digitally signed by SADASIVAM POORNIMA
DN: cn=SADASIVAM POORNIMA, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
இராணிப்பேட்டை.